புதுமலர்: 09 கார்த்திகை - மார்கழி இதழ்: 06

# அனல்

இணை ஆசிரியர்கள்

- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.11.2012

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்
- கவிதை - ஓ... உலகமே
- வாலிபர் வளாகம் - இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்
- வினா விடை - 54
- மரணபயம்
- பக்தர்களின் பயிலகம்
- நற்செய்தி - விடுதலைக்கு வழி
- குறுக்கெழுத்துப் போட்டி - 52
- கோப்பையை உடைத்தது யார்?
- அருட்பணியாளர் சரிதை - ஜோண் ஸ்கடர்
- மூவரி முத்துக்கள்
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம்; உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

**வேதிக வியாபாரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



**கிறிஸ்துவுக்குள் பிரியமான அனல் வாசகர் களுக்கு எமது அன்பின் வாழ்த்துக்கள்!**

இவ்வாண்டின் கடைசி வெளியீடாக இவ் அனல் உங்கள் கரங்களில் கிடைப்பதையிட்டு தேவனுக்கு நன்றி கூறுகிறோம். ஆண்டு முழுவதும் தடைகள் இன்றி ஒவ்வொரு வெளியீட்டையும் வெளியிட கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். **இச் சஞ்சிகை மூலம் வாசகர்களாகிய நீங்கள் பயனடைந்திருப்பீர்களென நம்புகின் றோம்.** வரப்போகும் புத்தாண்டில் கர்த்தருடனான உங்கள் ஓட்டத்தில் அதிக உறுதியுடன் செல்லுங்கள். உங்கள் வாழ்வை பரிசுத்தமாகக் காத்துக் கொள்ளுங்கள்.

1சாமுவேல் 3ம் அதிகாரத்தில் கர்த்தருடைய ஆலயத்திலே வளர்க் கப்பட்ட சாமுவேலை கர்த்தர் கூப்பிட்டார். அப்போது அவன் ஏலியிடம் ஓடிப்போகி றான். சிறுவனாகிய சாமுவேலை கர்த்தர் கூப்பிட்ட மூன்று தடவைகள் அவன் ஏலியிடமே ஓடிச் சென்றான். ஏலியின் கீழாகவே சாமுவேல் இருந்தான். **ஏலியின் சத்தத்துக்கு உடனே கீழ்ப்படிவது சாமுவேலின் பழக்கமாக இருந்திருக்க வேண்டும். அதனாலேயே ஏலியிடம் ஓடிச் சென்றான்.** கடைசியாக ஏலி நான் உன்னைக் கூப்பிடவில்லை: **"நீ போய் படுத்துக்கொள், உன்னைக் கூப்பிட்டால் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்"** என்று சொல்என்றான். (1சாமுவேல் 3:9).

**உங்களுக்கு மேலாக உள்ள கர்த்தருடைய ஊழியர் களின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து வாழப்பழகுங்கள். அது கர்த்த ருடைய சத்தத்தைக் கேட்க உங்களை வழிநடத்தும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.** - ஆசிரியர் -

## அனலின் வாழ்த்துக்கள்!

**எமது சபையின் தலைமைப் போதகர் ஜொசாயா பிலிப் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை கடந்த நாற்பது ஆண்டுகளாக நிறைவேற்றி வந்திருக்கின்றார். உண்மையும் உத்தமமுமாய் கர்த்தருடைய அழைப்பில் நிலைத்திருந்து கர்த்தருடைய பணி செய்த போதகர் தொடர்ந்தும் கர்த்தருடைய பணி செய்ய அனலின் வாழ்த்துகள்!.**

**- ஆசிரியர் -**

# கதையும் கற்றதும்

## ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்

ஒரு காலை வேளையில் ஒரு மனிதன் கடற்கரை ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தான். எதிரிலே தூரத்தில் இன்னொரு மனிதன் நடந்து வந்து கொண்டிருப்பதை அவன் அவதானித்தான். சிறிது சிறிதாக அவர்கள் இருவரும் அண்மித்துக் கொண்டிருந்தார்கள். எதிரிலே வந்து கொண்டிருந்த நபர் கீழே குனிந்து ஏதோவொன்றை எடுத்து மீண்டும் கடலுக் குள்ளே எறிந்து கொண்டிருந்தார். அந்த நபர் என்ன செய்கிறார் என்பது இவனுக்கு முதலில் விளங்கவில்லை. ஆனால் அவர்கள் இருவரும் அண்மையாக வந்த போது அந்த நபர் கடற்கரை ஓரமாக வந்து சிதறி இருந்த நட்சத்திர மீன்களை எடுத்து கடலுக்குள் வீசுவதை இவன் கண்டு கொண்டான். இந்த செயல் இவனுக்கு சற்று விசித்திரமாகவே இருந்தது.




எனவே இந்த மனிதன் அந்த நபரிடமாய் சென்று அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று விசாரித்தான். அதற்கு அந்த நபர் "இங்கே கடற்கரை ஓரமாக வந்து சிதறி கிடக்கும் நட்சத்திர மீன்களை எடுத்து மீண்டும் கடலுக்குள்ளே வீசுகிறேன். கடல் அலைகளின் மாற்றம் காரணமாக இந்த மீன்கள் கரையொதுங்குகின்றன. இவற்றை இப்படியே விட்டுவிட்டால் அவைகள் இறந்து போய்விடும்" என்று கூறினார்.

அதற்கு இந்த மனிதன் "அது சரிதான் நண்பனே! ஆனாலும் இங்கே ஆயிரக்கணக்கில் நட்சத்திர மீன்கள் சிதறி இருக்கின்றனவே. இவை எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து கடலுக்குள் வீசுவது என்பது முடியாத காரியம் அல்லவா? இதே போன்ற நிலைமை

வேறு பல கடற்கரைகளிலும் நடக்கிறதே! அப்படியானால் உங்களது இந்த செயல் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டான்.

அப்போது அந்த நபர் சிரித்துவிட்டு கீழே குனிந்து ஓர் நட்சத்திர மீனை கையில் எடுத்துக் கொண்டார். அதைக் கடலுக்குள் வீசிவிட்டு: "அந்த மீனுக்கு ஓர் மாற்றத்தைக் கொடுத்தேன்" என்று கூறினார்.

ஆம்! நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நபர்களாக பலவித பாரங்களோடும், சுமைகளோடும், உத்தரவாதங்களோடும் எம் வாழ்வை கொண்டு செல்கிறோம். நாம் செய்ய வேண்டிய காரியங்கள் அநேகமாய் இருப்பதால் மற்றவர்களைக் குறித்து சிந்திக்கவும் அவர்களுக்கு உதவவும் எமக்கு பொதுவாக நேரம் கிடைப்பதில்லை. நாம் கடந்து செல்லும் பாதையிலே அநேகர் வாழ்வை இழக்கும் தறுவாயில் சிதறிக்கிடக்கிறார்கள். எம்மாலே முழு உலகத்தையும் மாற்ற முடியாது என்றாலும் எம் அருகே இருக்கும் ஒருவருடைய வாழ்வை யாவது மாற்ற எம்மால் கூடாதா? ஒரு கணம் நின்று ஒரு வாழ்வுக்கு வாழ்வு கொடுப்பது எத்தனை பெரிய செயல்?



ஆம் ஒருவருடைய வாழ்வை செழிப்பாக்குவதன் மூலம் நாம் ஓர் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்துகிறோம். எனவே சற்று சிந்திப்போம்! எத்தனையோ ஆத்துமாக்கள் அழிவின் தருவாயில் இருக்கின்றன. அவர்களுக்கு அன்பையும், ஆதரவையும் இயேசுவின் சந்தோஷத்தையும் கொடுக்கும் ஓர் காரணமாக நாம் இருப்போம்! **ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.**

**"தேவனின் ஆசீர்வாதம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக"**

கெ. இன்பரூபன்

# ஓ.....உலகமே

உலகை மிரட்டும் அழிவுச் செய்திகள்
உருட்டுகிறது மனித சந்ததியின் கபாலங்களை
உரித்து எடுக்கிறது விண்வெளிக் கலங்கள்
உயிரெடுக்கும் கற்கள் உயிராயுதமாய் வருகின்றன.

ஓ.....

மனிதனே ஜாதிகளே ஜனங்களே
உலகை முடிக்கும் முடிவுகளை
விஞ்ஞானிகள் வெளியிடுகின்றனர்
விடியாத பொழுதுகளாய் முடிவுகளை
எண்ணும் தனித் தலைமைகளின்
சரித்திர சாம்ராஜ்ஜியங்கள் சரிய
ஆரம்பிக்கிறது......

ஏன் ......

உலகம் அழியுமா? என்பதைப்
பார்க்கிலும் ஒவ்வொரு மனிதனும்
இயேசு ராஜா வரப்போகிறார்
என்று எண்ணி வாழ வேண்டும்
என்பதை தேவனின் காரியாலயம்
பறை சாற்றுகிறது.....
நீ ஆயத்தமா?.....

**ஆயத்தப்படு புது ஆண்டைக்**
**காண முன்**
**புதுமை பெற்றிட எழுந்து வா!.**





**எ**ன் அன்பின் வாலிப நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**2012ஆம் ஆண்டின் இறுதிக்குள் வந்திருக்கும் உங்களுக்கு ஓர் உயர்ந்ததும் மகிமை நிறைந்ததுமான வாழ்க்கைக்கு வேத வசனத்தின் ஆதாரத்துடன் சில அன்பின் ஆலோசனைகள்.**

*புதிய புதிய காரியங்களை ஆராய்வதற்கும் பார்ப்பதற்கும் ஏக்கம் கொள்ளும் பருவம் வாலிப பருவம் என்றால் மிகையாகாது. இயேசு சொன்னார்:* **ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று.**

## ✷ ஆடைகளும், அங்கங்களும்

*மிகவும் எச்சரிப்பாயும் அவதானமாயும் இருங்கள். தகுதியில்லாத வஸ்திரங்களை அணிய வேண்டாம்.* **பரிசுத்தரின் நாமத்தை அபகீர்த்தி பண்ண வேண்டாம்.** *அங்கங்கள் வெளியே காண்பிக்க முயற்சிக்க வேண்டாம். இயற்கையாகவே தேவன் பெண்களை அழகாகவே படைத்துள்ளார். ஆண்களும் தரக்குறைவானவர்களைப் பார்த்து*



ரசிக்கவும், விமர்சிக்கவும், சிலேடை பேச்சுக்களைப் பேசுவதையும் விட்டுவிடுங்கள்.

## ✹ பார்வையில் பரிசுத்தமும், பார்வையில் இருளும்

உன் கண் தெளிவாயிருந்தால் <u>உன் சரீரம் முழுவதும்</u> வெளிச்சமாய் இருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு. **எதைப் பார்க்கிறாய், எப்படி பார்க்கிறாய், யாரோடு இசைந்து பார்க்கிறாய், நீர் பார்ப்பதை உன் மனம் சம்பூரணமாய் ஏற்றுக் கொள்ளுகின்றதோ, அல்லது இருளை விரும்புகின்றாயோ எச்சரிக்கை.**



**வெளிச்சம் இருளாகாதபடி பத்திரமாய் காத்துக்கொள்! காத்துக்கொள்!!. மந்தப் புத்தியாய் ஜீவனம் பண்ணாதே பரிதாபம்.**

## ✹ பரிசுத்த வேதாகமத்தை நேசியுங்கள்

உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன். **கர்த்தருடைய வார்த்தையை நேசித்து, வாசித்து, கிரியையில் நடப்பியுங்கள்.** இப்படி செய்வது தேவனுக்கு பிரியம்.

## ✹ இது நியாயம்

**உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்.** முழு மனதுடன் உங்கள் தாய் தகப்பனை மதித்து, கனப்படுத்தி பூமியில் அவர்கள் உயிரோடு இருக்கும் நாள் மட்டும் சத்திய வசனத்திற்கு சாட்சியாக மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து செயல்படுங்கள் பரிசுத்தத்தை நோக்காகக் கொண்டு.

## ✹ விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு

இன்று அனேக வாலிபர்களை இந்த வசனத்திற்கு கீழ் காணோமே. காரணம், உலகம் அவர்களைக் கொள்ளையாடி விட்டது. **உண்மையான தேவ பிள்ளைகளுக்கு உரிய அடையாளம் மற்றவர்களுக்கு மாதிரி.** லௌகீக

ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்.

## ✸ பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது

**பிரசங்கி 10:19 பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்.** தீமைக்கு வேரான காரியம் உன்னில் முளைத்து எழும்ப விடாதே, பணத்தை நாடித் தேடுகிறவர்கள் விசுவாசத்தை விட்டுவழுவி, அநேக வேதனைகளால் தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் கவனம்.

## ✸ அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்



பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் முதலாவது உன்னை முழுவதும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து பின்பு உன் அவயவத்தின் கிரியைகளையும் பரிசோதித்து யோக்கியமானவைகளைச் செய்ய எல்லா மனுஷருக்கு முன்பாகவும் நாடுங்கள். (ஒரு சிலருக்கு முன்பாக மாத்திரம் அல்ல)

## ✸ நேரத்தை வீண் விரயமாக்க வேண்டாம்

நண்பர்கள், உறவுகள், வீடுகள் என்று சுற்றித்திரிந்து கட்டுக்கதைகளுக்கும் கிழவிகள் பேச்சுக்கும் செவியை சாய்க்க வேண்டாம்.



## இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்

**உண்மையுள்ளவர் - 1கொரிந்தியர் 10:13**

**அழைத்தவர் உண்மையுள்ளவர் - 1 கொரிந்தியர் 1:9**

- உண்மையுள்ள ஜீவியத்திற்கு நீ உன்னை எப்போது முழுமையாய் ஒப்படைக்கின்றாயோ அன்றே உன்னில் குமாரனாகிய இயேசுவின் பண்புகள் மலர ஆரம்பிக்கும்.

அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களு மாயிருக்கிறார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 17:14)

- எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டு பாவம் இல்லா தவராய் இருக்கிறவரை நோக்கிப்பார், எந்த சூழ்நிலையிலும்.

- மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாது இருக்கிற ஆட்டைப் போல இருந்தார். மீட்பை உண்டுபண்ண மீட்பர் மனுஷனானார்.

- தகுதியாய்பேசி கன்னத்தில் அடி வாங்கியவர். தனது ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்பதில் உறுதியாய் இறுதிமட்டும் முழங்கியவர்.

- தன்னைக் காட்டிக்கொடுப்பவனை நன்கு அறிந்திருந்தும் அவன் மீதும் அன்பும் கரிசனையும் கொண்டவர். கூடவே வேறொரு சீடனிடம் அவனைக் காட்டிக்கொடுக்க விரும்பாதவர்.

- அடிமை செய்வதைக் காட்டிலும் கீழான ஒரு வேலையை செய்தவர். பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து பாதங்களைக் கழுவி துடைத்தவர்.

- மறுதலித்துப் போனவனையும் தேடி வந்து போஜனம் கொடுத்து ஊழியத்தை ஒப்படைப்பவர்.

- வியாகுலப்பட்டு மரண வேளையை நெருங்கிய போதும் என் சித்தம் அல்ல, என வீர முழக்கம் இட்டவரைப்பாருங்கள்.

- உண்மையான ஆராதனை என்பது ஆவியோடும் உண்மையோடும் என தெளிவாய் எடுத்துரைத்தவர்.

- இயேசுவைக் கவனித்துப்பாருங்கள். அப்பொழுது மாத்திரமே அவா தரும் நித்திய வாழ்வையும், பூமியில் அவருடைய சித்தத்தையும் செய்து சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பீர்கள்.

இயேசுவைக் கவனித்துப் பார்க்கத் தவறுவாயானால்

உன் வாலிபம் கேலிக்குரியதாகவும் உட் காயங்கள்

அனேகம் கொண்டதாகவும் காணப்படும். கூடவே

நித்திய ராஜ்யத்தையும் இழந்து விடுவாய்.

**இந்த ஆண்டின் இறுதியில் உன் பார்வையை முற்றும் இயேசு மீது பதிப்பாயாக. நண்பர்கள், திரைப்படங்கள், தவறான உறவுகள், உல்லாச விடுதிகள், தவறான பஸ் பயணங்கள், அனைத்து கேடான பார்வையில் நின்றும் விடுதலை பெற்று அவருக்கு சாட்சியாகவும், அனேகருக்கு ஆசீர்வாதமாகவும் இருப்பாயாக.**

**போதகர் வேதநாயகம் சுமணன்.**



# வினா விடை - 54

01. "உன் சிநேகிதன் மேல் உனக்கு இருக்கிற தயை இதுதானோ" என்று கேட்டது யார்? (2017) அப்சலோம் 2 சாமு 16:17

02. "அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்" யார்? (2018)

03. "சிநேகிதனை விசுவாசிக்க வேண்டாம், வழிகாட்டியை நம்பவேண்டாம்" என்று வாசிப்பது எங்கே?

04. "தேவனுடைய ஆலயம் அதின் ஸ்தானத்திலே கட்டப்பட வேண்டும்" என்று சொன்னது யார்? (9/2018)

05. "கர்த்தரின் ஆலயத்திற்குள் பிரவேசியாதிருந்தவன்" யார்? (1/2019)


06. "ஜனங்கள் அவனைத் தங்கள் மேல் தலைவனும் சேனாபதியுமாக வைத்தார்கள்" எவனை?

07. "நான் கர்த்தருடைய ஆலயத்திற்கு போகிறேன்" என்றது யார்?

08. "என் சிநேகிதர் என்னைப் பரியாசம்பண்ணுகிறார்கள்" என்று சொன்னது யார்?

09. "அவன் மேன்மையுள்ளவனாயிருந்ததினாலல்லவோ அவர்களில் தலைவனானான்" அவன் யார்?

10. "கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்" என்று வாசிப்பது எங்கே?



# மரண பயம்

தேவன் மனிதனை உண்டாக்கிய போது தேவ சாயலாகவே உண்டாக்கினார். ஆணும் பெண்ணுமாக, அனைத்துப் படைப்புக்கள் மேலும் அதிகாரம் உடையவனாக உருவாக்கிய போதும் தேவன் தனக்கு சொன்ன கட்டளையை மீறி பாவத்திற்கு உள்ளானார்கள். தேவ தண்டனைக்கும் உள்ளானார்கள். கூடவே இந்தப் பூமியும் சாபத்திற்கு உள்ளானது. முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வருத்தத்தோடே பூமியின் பலனைப் புசிப்பாய். நீ மண்ணில் இருந்து எடுக்கப்பட்டபடியால் மண்ணுக்கு திரும்புவாய் என்று தேவன் சொன்னார். பாவமும், வியாதியும் மரணமும் முழு மனுக்குலத்தையும் ஆட்கொண்டது.

ஆதாம், ஏவாள் இவர்களுடைய குடும்பத்திலே முதலாவது மரணம் சம்பவிக்கிறது. சகோதரன் சகோதரனுக்கு விரோதமாய் எழும்பி கொலை செய்கின்றான். ஒவ்வொரு குடும்பமும், கோத்திரமும், தனி மனிதனும், மரண பயத்தினால் பீடிக்கப்பட்டு அடிமையாக பயந்து பயந்து சஞ்சரித்து வந்தார்கள். தேவன் நம்மேல் வைத்த கிருபை பெரியது. **தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்ற தாயிருந்தது. (எபிரேயர் 2:10)**

**இயேசு கிறிஸ்து அனேகரை மகிமையில் சேர்க்கும்படியாய் உபத்திரவங்களிலேயும் வெற்றி பெற்றுள்ளார். அவரை (இயேசுவை) விசுவாசிக்கிறவனுக்கு ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்கு உட்பட்டு இருக்கிறான்.**

ஆண்டவர் ஆயத்தமாக இருக்கிறார். மரண பயத்திலிருந்து விடுவித்து நித்திய ராஜ்யத்தை தருவதற்கு. ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கு சிலுவையில் உனக்காக, எனக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார்.

ரேமா




04. பணஆசை பாவத்திற்கு வழி நடத்தும் 1தீமோத்தேயு 6:9-10

ஐசுவரியம் ஓர் வலையைப்போல இருக்கிறது. **இது அடிமைத்தனத்திற்கே வழிநடத்துமேயொழிய சுயாதீனத்திற்கு அல்ல.**

**திருப்தியைத் தருவதற்கு பதிலாக செல்வமானது மேலதிக இச்சையை அல்லது ஆசையை உண்டுபண்ணும்.** இப்படி உண்டாகும் போது இவைகளையும் திருப்தி செய்ய வேண்டிய நிலை உருவாகிவிடும். **ஒத்தாசையையும் நலத்தையும் தருவதற்கு பதிலாக மேலதிகமான செல்வம் புண்படுத்தி காயப்படுத்தும்.**

இதன் விளைவை பவுல் வர்ணிக்கின்றார்: 1தீமோத்தேயு 6:9 **இது அமிழ்ந்து போகின்ற ஒரு மனிதனின் நிலையை சித்தரிக்கின்றது.** இவன் தன் செல்வத்தில் நம்பிக்கை வைத்து பயணம் செய்தான். புயல் வீசிய போதோ மூழ்கிப்போனான்.

## 03. தேவனுடைய மனுஷன் - 1தீமோத்தேயு 6:11-16, 20-21

மக்களின் தேவைகளைக் கவனிக்கும் தீமோத்தேயு தன்னையும் கவனிப்பது அவசியமாக இருக்கும். **1தீமோத்தேயு 4:16 "உன்னைக் குறித்தும் எச்சரிக்கையாய் இரு" என்பது பவுல் புத்திமதிகளில் ஒன்று.** "நீயோ" என்ற பதம் தீமோத்தேயுவுக்கு தப்பாக உபதேசிப் போருக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைக் காண்பிக்கின்றது. **இவர்கள் உலக மனுஷர்கள்; தீமோத்தேயுவோ தேவனுடைய மனுஷன்.**

இங்கு பவுல் தீமோத்தேயுவுக்கு நான்குவித புத்திமதிகளைக் கூறுகின்றான். **இவற்றிற்கு கீழ்ப்படியும் போது ஊழியத்தில் வெற்றியும், தேவனுடைய மனுஷன் என்ற சாட்சியைத் தொடர்ந்தும் காத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.**

### 01. விட்டு ஓடு — 1தீமோத்தேயு 6:11

விட்டு ஓடுவது கோழைத் தனத்திற்கு அடையாளமாக கணிக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. **என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என நெகேமியா கேட்டான்.** ஆனாலும் ஓடிப்போவது ஞானத்தின் அடையாளமாகவும் வெற்றியின் வழியாகவும் கணிக்கப்படும் நேரங்களும் உண்டு.

**யோசேப்புக்குத் தன் எஜமானின் மனைவியினால் சோதனை வந்த போது அவன் ஓடினான். (ஆதியாகமம் 39:12).** சவுல் தன்னைக் கொல்ல வகைதேடுகின்றான் என அறிந்த போது தாவீது ஓடினான் (1சாமுவேல் 19:10) **"விட்டுஓடு" எனப்பவுல் இங்கு குறிப்பிடும் பதம் நாம் எண்ணுவதைப்போல ஓடுகிறதைக் குறிப்பது அல்ல.** பாவத்தைவிட்டும் தப்பாக உபதேசிப்போரின் பாவத்தைவிட்டும் தீமோத்தேயு தன்னைப் பிரித்துக் கொள்ள வேண்டியதைக் குறிக்கின்றது.

### 02. நாடு — 1தீமோத்தேயு 6:11

சரியான வளர்ச்சி இல்லாத பிரிந்து வருதல்; தனித்து விடப்படல் என்ற நிலைக்கு நம்மைக் கொண்டு வந்துவிடும். **பின்வரும் காரியங்களை நாம் நாடி விருத்தி செய்யாவிட்டால் நாம் எதிர்ப்பவர்களாக மாத்திரமே காணப்படுவோம்.**

<u>நீதி:-</u> தனிப்பட்ட உருக்குலையாத நிலை. இது நம் குணாதிசயத்தோடு சம்பந்தப்பட்டது.

<u>தேவபக்தி:-</u> நடைமுறை கடவுள்பற்று. இது நடத்தையோடு சம்பந்தப்பட்டது.

<u>அன்பு:-</u> இது அகாபே அன்பு. மற்றோருக்காக தியாகம் செய்யும் அன்பு.

<u>பொறுமை:-</u> இது சகிப்புத் தன்மையைக் குறிக்கின்றது. போக்கு கடினமாக இருக்கும் போதும் அதனோடு இணைந்து இருப்பது.

<u>சாந்தகுணம்:-</u> கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வல்லமை/

## 03. போராடு — 1தீமோத்தேயு 6:12–16

இது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள போராடுவதைக் குறிக்கின்றது.

## 04. ஐசுவரியவான்கள் — 1தீமோத்தேயு 6:17–19

பவுல் ஏற்கனவே பண ஆசையினால் உண்டாகும் ஆபத்தைக் குறித்து எழுதிவிட்டான். **ஆனால் ஐசுவரியவான்களுக்கென கொடுக்கப்பட வேண்டிய விசேஷ கட்டளைகளை இங்கு தீமோத்தேயுவுக்கு குறிப்பிடுகின்றான்.**

### 01. தாழ்மையுள்ளவனாயிரு 1தீமோத்தேயு 6:17

ஐசுவரியம் ஒருவனை இறுமாப்படையச் செய்யுமானால் அவன் தன்னைப் பற்றியோ தன் ஐசுவரியத்தைப் பற்றியோ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. **உபாகமம் 8:18 ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கான பெலனைக் கொடுக்கின்றவர்.** நாம் உரிமையாளர்கள் அல்ல; உக்கிராணக்காரர்கள். **ஆனால் விசுவாசிகள் இவ்வுலகத்திலும் இனிவரப்போகிறதிலும் ஐசுவரியமுள்ளவர்களாக இருக்கலாம்.**

எப்படி? அவன் வைத்திருப்பதினால் தேவனைக் கனம் பண்ணுவதன் மூலம் ஆகும். **உண்மையில் இந்த உலகத்தில் ஏழையாக இருப்பவனும் தன்னிடம் உள்ளவளங்களை தேவனை மகிமைப்படுத்த பாவித்தால்** – இனி வரப்போகின்ற உலகில் பெரிய பலாபலன்களைப் பெறலாம்.

### 02. ஐசுவரியத்தை அல்ல; தேவனை நம்ப வேண்டும் 1தீமோத்தேயு 6:17

**கர்த்தரின் உவமையில் கூறப்பட்ட பணக்கார கமக்காரன் தன் ஐசுவரியம் தன் பாதுகாப்பு என எண்ணினான்.** ஆனால் உண்மையில் அது பாதுகாப்பற்ற தன்மையின் சான்று ஆகும். **இவன் உண்மையில் தேவனை நம்பவில்லை.** ஐசுவரியம் நிலையற்றது. பெறுமதியில் மாத்திரமல்ல, காலவரையறையிலும் கூட.

**ஐசுவரியத்தை திருடர் கொள்ளையிடலாம்.** எம் வைப்புக்களின் பெறுமதி குறையலாம்; காலத்தின் சீற்றம் எம் வீடுகளையும் பொருட்களையும் அழிக்கலாம். **தேவன் எமக்கு ஐசுவரியத்தை தந்திருந்தால் நாம் கொடுத்தவராகிய தேவனை நம்ப வேண்டும்.** கொடுத்தவரையே ஒழிய கொடைகளை அல்ல.

## 03. தேவன் கொடுத்ததை அனுபவிக்க வேண்டும் 1தீமோத்தேயு 6:17

"அனுபவி" என்ற பதம் வேதத்தில் உண்டு. **பிரசங்கியிலும் வாழ்க்கையின் ஆசீர்வாதங்களை அனுபவி என்பதும் கூறப்பட்டுள்ளது.** இங்கு அனுபவி என்பது பாவத்திற்கு ஏதுவாக அதைப்பாவி என்பது அல்ல. **தேவன் எமக்கு கொடுத்ததை அவரின் மகிமைக்காக பாவிப்பது மட்டுமே.**

## 04. தேவன் கொடுத்ததை பயன்படுத்து 1தீமோத்தேயு 6:18-19

மற்றோருக்கு நன்மை செய்யும்படி நாம் நம் ஐசுவரியத்தை பாவிக்க வேண்டும். **நம்மிடம் உள்ளதை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.** இப்படிச் செய்யும் போது ஆவிக்குரிய ரீதியிலும் நாம் நம்மை ஐசுவரியவான்களாக மாற்றுகின்றோம்.

**அத்துடன் வரும் காலத்திற்காக அதை மூலதனம் பண்ணுகின்றோம். 1தீமோத்தேயு 6:19 "நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி".**

# 11 தீமோத்தேயு

**இந் நிருபத்தில் கடைசிக் கால ஊழியத்திற்கு எப்படி ஆயத்தமாகலாம் என்பதனை பவுல் விளக்குகின்றான்.** இதை அடிப்படையாகக் கொண்டு தீமோத்தேயு வெற்றியுள்ள ஊழியத்தைச் செய்ய அவசியமாகக் கொண்டிருக்க வேண்டிய மூன்று வித அவசியங்களை பவுல் கூறுகின்றான்.

## 01. உற்சாகமான (தைரியமான) ஊக்குவித்தல் 11தீமோத்தேயு 1:1-7

ஊக்கத்தை இழந்த அச்சமுள்ள மனிதனுக்கு சுவிசேஷ ஊழியத்தில் இடம் இல்லை. **எந்த வேலையின் காரிய சித்திக்கும் தைரியமுள்ள ஊக்குவித்தல் அவசியம்.** பவுல் இந்த மனப்பாங்கை நெருப்பை அனல் மூட்டி எழுப்புவதற்கு ஒப்பிடுகின்றான். *11தீமோத்தேயு 1:6.*

**இத் கருணைத்தில் தீமோத்தேயு பின்வாங்கிவிட்டானோ அல்லது அவனது வாழ்வின் ஆவிக்குரிய அக்கினி அவிந்து போய்விட்டதோ என நாம் எண்ணக்கூடாது.** ஆனால் பவுலோ இங்கு அக்கினி இன்னும் பிரகாசித்து எரிய தைரியப்படுத்துகிறான். **ஏன்? இது அவன் வாழ்க்கைக்குத் தேவையான ஆவிக்குரிய சக்தியை உருவாக்கிக் கொடுக்கும்.** நான்கு விதமான தைரியமூட்டுதலை இங்கு பவுல் குறிப்பிடுகின்றான்.

### 01. பவுலின் அன்பு 11தீமோத்தேயு 1:1—2

பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவே என்பது "விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்பதிலும் உறுதியானது. **இது ùம் நிருபம் எழுதும் போது தீமோத்தேயுவை குறைவாக நேசித்தான் என்பதல்ல.**

ஆனால் அதை இப்போது அதிகமாக வெளிப்படுத்து கின்றான். **பவுலின் வாழ்க்கை முடியும் தருணத்தில் உள்ளது.** இத் தருணத்தில் பிரியமுள்ள தீமோத்தேயு அவனுக்கு எப்படி இருந்தான் என்பதனை பவுல் உணருகின்றான். **பவுலின் சொந்த சூழலே கஷ்டமாக இருந்தது ஆனாலும் அவன் அதிகம் தைரியப்பட்டான்.** ஒன்று அவன் கிறிஸ்துவின் அப்போஸ்தலன். அத்துடன் தன் எஜமான் தன்மீது அக்கறைப்படுவார் எனவும் அறிந்திருந்தான். **தனக்கு எது நிகழ்ந்தாலும் அது தேவனின் கரத்தில் தான் உள்ளது என அறிந்திருந்தான்.**

அவன் வாழ்வின் வாக்குத்தத்தை அறிந்திருந்தான். அது கிறிஸ்து மரணத்தை பரிகரித்தார். **இதனால் தான் பவுலினால் 2வது வசனத்தின் வாழ்த்துதலை தீமோத்தேயுவுக்கு கூறக்கூடியதாக இருந்தது.** இவை எல்லாம் போதகர்மாருக்கு தேவை.

### 02. பவுலின் ஜெபம் 11தீமோத்தேயு 1:3—4

பெரிய அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்காக ஜெபிப்பது எவ்வளவு உற்சாகமளிப்பதாக இருக்கும். **தீமோத்தேயுவின் பெலவீனங்களையும் பிரச்சினைகளையும் அறிந்த பவுல் திட்டவட்டமாகவும் பாரத்தோடும் ஜெபிக்கக்கூடியதாக இருந்தது.** பவுலின் ஜெபம் மனவுருக்கத்தோடும் அக்கறையோடும் இருந்தது.

### 03. பவுலின் நம்பிக்கை 11தீமோத்தேயு 1:5

### 04. தீமோத்தேயுவுக்கு கிடைத்த தேவரவு 11தீமோத்தேயு 1:6—7

தேவவரம் பரிசுத்த ஆவியானவர் சேவை செய்ய நம்மை பெலப்படுத்துகிறார். **கெட்டித்தனங்கள், பயிற்சி, அனுபவம் ஆவியின் பெலத்தின் இடத்தைப் பெறமுடியாது.**

## 02. வெட்கப்படாத பாடுகள் 11தீமோத்தேயு 1:8-12

"வெட்கப்படுகிறதில்லை" இந்த அதிகாரத்தின் திறவுகோல் எண்ணம். **பவுல் வெட்கப்படுகிறதில்லை. எனவே தீமோத்தேயு வையும் வெட்கப்படாதிருக்க புத்தி கூறுகிறான்.** அத்துடன் தன்

விலங்கைக் குறித்து ஒநேசிப்போரும் வெட்கப்படவில்லை என பவுல் அறிவிக்கிறான். **இதைக் குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் அறிவுரையைப் பார்ப்போம்.**

### 01. கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாதே 11தீமோத்தேயு 1:8−10

தீமோத்தேயுவின் இயற்கையான அச்சக்குணம், பாடுகளை உள்ளடக்கியுள்ள சாட்சிபகரும் சூழ்நிலையைத் தவிர்த்து இருக்கும். **இந்த நேரத்தில் பவுல் தேவையான தைரியத்தைக் கொடுக்கிறான்.**

### 01. தேவன் எமக்கு வல்லமையைத் தருகிறார்


சுவாப்படி நாம் பாடுகளை விரும்புகிறதில்லை. **இயேசு கூட இப்பாத்திரம் என்னை விட்டு அகலக்கூடுமானால் அகலட்டும் என ஜெபித்தார். பவுல் தன் சரீரத்தில் உள்ள முள் நீங்கும்படி மூன்றுமுறை ஜெபித்தான்.**

ஆனால் உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையில் பாடுகளும் ஒரு பங்கு. **கிறிஸ்தவர்கள் தப்புச்செய்ததினால் பாடுகள் அனுபவிக்கக்கூடாது.** ஆனால் சரியானதைச் செய்ததாலும் கர்த்தரைச் சேவித்ததாலும் பாடுகள் அனுபவிக்கிறார்கள். **நாம் நன்மை செய்து பாடுகளை அனுபவிக்கும் போது கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்கின்றோம்.**

அத்துடன் முழு சபையின் சார்பாகவும் பாடு அனுபவிக்கிறோம். கொலோசெயர் 1:24 **உதாரணம்: ஒரு கிறிஸ்தவனை சிறையில் அடைத்தார்கள். தீயில் ட்டு அவனைக் கொல்ல தீர்ப்பளித்தார்கள. அவன் இதனைச் சகிப்பானோ இல்லையோ என அறிய தன் விரலை ஒரு நாள் மெழுகுதிரி நெருப்பில் வைத்துப்பார்த்தான்.** வைத்தவன் தன்னால் முடியாது என யோசித்தான். **ஆனால் மரண நாள் வந்தபோது எந்த அச்சமும் இன்றி மரணத்தை தழுவினான்.** வல்லமை தேவையான நேரத்தில் தேவன் அவனுக்கு கொடுத்தார், முன்பதாக அல்ல.

**தொடரும்...**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)





# விடுதலைக்கு வழி!




அமெரிக்க விடுதலைக்கு வித்திட்ட பெரியோரில் பேட்ஷிக் கென்றியே சரித்திரம் காட்டும் தலைமகனாவார். வர்ஜீனியா மாநாட்டில் அவ் வீரப்பெருமகனின் உணர்ச்சி மிகு சூளுரையைக் கேளுங்கள்.

**"விலங்கையும் அடிமைத்தனத்தையும் கிரயமாக்கிக் கொள்ளுவதற்கு வாழ்க்கை அருமை யானதா? இனிமையானதா? சர்வ வல்ல தேவனே சற்றும் அதற்கு இடங்கொடா திரும். மற்றவரின் தெரிந்தெடுப்பு எதுவோ யானறியேன். என்னைப் பொறுத்தமட்டில் விடுதலையைத் தாரும் இல்லையேல் சாவைத்தாரும்"**

இந் நிலையே ஒவ் வொரு தனி மனிதனின் உள் ளத்து சத்தம். ஏதோ ஓர் விலங்கு, அடிமைத்தனம் நம்மைப் பிடித்திருக்கிறது. இதிலிருந்து மீட்சி இல்லையா? பாதுகாப்பு இல்லையா? என்று லட்சம் லட்சம் கேள்விகள் நம்மைத் துளைத் தெடுக்கின்றன.

சர்வ வல்ல தேவனின் திட்டத்திலேயே, தேசங்கள் இயங்குகின்றது. ஆனால் அதை மறந்த மனித வர்க்கம் இன்றும் பாவத்தை பயிரைப் போல் மேய்ந்து கொண்டிருக் கின்றனர்.

துன்மார்க்கத்தில் புதைந்து சூதாட்டத்தில் சீர்கெட்டும், மதுபான வெளியில் மாண்டு கொண்டும், விபச்சார மயக்கத்தில் உழன்று கொண்டும் இருக்கும் வாலிபரே நரகத்தில் **கண்விழிக்க முன் உனது நிலையை சற்று சிந்தித்துப்பார்!**

விஞ்ஞான விந்தையால் விடுதலைகள் வருமா? தேசங்கள் மறு தேசத்தை விட தன்னை பலப்படுத்தி மறு தேசத்தை அடிமைப்படுத்துகிறது. பாவத்தின் விந்தைஜாலத்தால் பரிசுத்த ஜனமும் பாவம் செய்கின்றனர். ஏன் இரத்தத்தில் ஊறிப்போன அடிமைப்படுத்தும் பாவங்கள் என்றும் அவர்களை அடிமைப்படுத்திக் கொண்டே இருக்கும்.

**எனவே எம்மில் மாற்றம் நிகழ்த்தவல்ல ஒருவர் தேவை. அவர்தான் பாவ சாப அடிமைத்தனத்தில் இருந்து மக்களை மீட்கும் மீட்பர்; இயேசு கிறிஸ்து ஆவார்.**

இவரை நீர் அறிந்திரா விட்டால்:

**1. அறிய வாஞ்சியுங்கள்**

**2. அறிந்து கொள்ளுங்கள்**

**3. அதன்படி நடக்க/வாழ முற்படுங்கள்**


அப்பொழுது விடுதலை வேண்டி ஏங்கும் உங்கள் ஆத்துமா விடுதலை பெறும்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## குறுக்கெழுத்துப் போட்டி - 51 சரியான பதில் எழுதியவர்கள்


01. சி.தங்கமணி - மீசாலை
02. செ.நகுலா - பாண்டவெட்டை
03. செ.எமிமாள் - பாண்டவெட்டை
04. மா.ஜெயந்தி - மானிப்பாய்
05. பி.நேசமணி - மானிப்பாய்
06. த.குமுந்தராசா - நாவற்குழி
07. இ.யோசுவாபோல் - பள்ளிக்குடா
08. இ.கருணாரூபி - பள்ளிக்குடா
09. க.ஏஞ்சலின்கிறிஸ்ரீனா - பள்ளிக்குடா
10. அ.சுதர்சினி - வேரவில்
11. மு.சுபாஜினி - நாவற்குழி
12. செ.எலிசம்மா - நாவற்குழி

# குறுக்கெழுத்துப்போட்டி – 52




குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக



01. இந்த ராஜா லீபனோனின் முட்செடியை உவமையாகச் சொன்னார்
03. கிதியோனின் மறுபெயர்
06. சவுலின் தலையை இந்தக் கோவிலில் வைத்தார்கள்
10. லேவியின் குமாரரில் ஒருவன்
14. இவன் பேதையான புறாவைப்போல் இருக்கிறான்

## வலமிருந்து இடமாக

02. இது தும்மிகையில் ஒளி வீசும்
05. உன் கூந்தல்...... மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது
08. என் ஜீவன் பெலிஸ்தர்களோடு மடியக்கடவது என்று சொன்னவன்
09. கொரிந்து பட்டணத்து ஜெப ஆலயத்தலைவன்
11. இத் தீவார் ஓயாப்பொய்யர்



## மேலிருந்து கீழாக

01. இவன் தாவீதை தன் உயிரைப்போலச் சிநேகித்தான்
04. "தீமைக்கு சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்கு ...... அவர் உன்னை இரட்சிப்பார்
07. இவனைப் பரிகாசம் பண்ணின பிள்ளைகள் கரடிகளால் கொல்லப்பட்டனர்

## கீழிருந்து மேலாக

12. மனைவிக்கு மாளிகை கட்டியவர்
13. காலேபின் இரண்டாம் மனைவி
14. இந்தப் பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக்கடவன் என்று யோசுவா சபித்தான்



# கோப்பையை உடைத்தது யார்?

## வேதப்பகுதி: லூக்கா 15:13-23

வீட்டிற்குள் வந்த அம்மா சமயலறைக்குச் சென்ற போது அங்கே அழகான ஒரு பீங்கான் கோப்பை உடைந்து கிடந்தது. **எப்படி உடைந்தது? என்று அம்மா கேட்டார்கள். ஆலனும் எனக்குத் தெரியாது என்றான். அனிதாவும் எனக்குத் தெரியாது என்றாள்.** ஆலன் அல்லது அனிதா தான் அதனை உடைத்திருக்க வேண்டும். **யாரும் உண்மையை சொல்லாததால் இரண்டு நாட்கள் அப்பாவும், அம்மாவும் துக்கமாக இருந்தனர். பிள்ளைகள் பொய் பேசுகிறார்களே என்ற வருத்தம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும்.**



அப்பாவும், அம்மாவும் சோகமாக இருப்பதை உணர்ந்தான் ஆலன். **"அம்மா என்னை மன்னியுங்கள், நான் தான் அந்த கோப்பையை உடைத்தேன்"** என்றான். அம்மாவுக்கும், அப்பாவிற்கும் ரொம்ப சந்தோஷம். **"ஆலன் கோப்பை உடைந்தது பெரிய பிரச்சினை அல்ல. நீ உண்மை பேசாதது தான் வருத்தம். இப்போ நீ உண்மையை சொன்னதால் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்"** என்றனர். **நாம் தவறுகளை மறைக்கக்கூடாது. மறைக்காமல் மன்னிப்பு கேட்டால் கர்த்தர் சந்தோஷமாக மன்னிப்பார்.**

**சிந்தனைக்கு: தேவன் நாம் தவறு செய்தால் மன்னிப்பார். தவறை உணர மறுத்தாலோ துக்கப்படுவார்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! - டிசம்பர் 18

# அருட்பணியாளர் சரிதை

## இலங்கையில் இறைபணியாற்றிய.... ஜோன் ஸ்கடர்

### சிறுபராயமும் குடும்பமும்

1793ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மூன்றாம் திகதி ஜோன் ஸ்கடர் என்பவர் பிரீ ரோல்ட்டிலுள்ள நியு ஜெரி எனும் நகரில் ஜோசப் மரியா எனும் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். **பழைய ஏற்பாட்டில் அன்னாள் தனக்கு பிறந்த மகனைத் தேவனுக்கென்று ஒப்புக் கொடுத்தது போன்றே மரியாவும் தனது மகனைக் குழந்தைப் பராயத்திலேயே தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தார்.** 1809ஆம் ஆண்டு பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசித்த இவர் 1813ஆம் ஆண்டு தனது பதினாறாவது வயதில் சிறந்த பெறுபேறுகளோடு பட்டப்படிப்பை நிறைவு செய்தார். சுவிசேஷ ஊழியராகுவதே இவருடைய வாழ்வின் இலட்சியமாக இருந்தது. இவருடைய தகப்பனார் இவர் மிஷனரியாவதை விரும்பாததின் நிமித்தம் இவர் மருத்துவத் துறைக்குத் திரும்பினார். இவர் அவருடைய பட்டப்படிப்பை 1818இல் முடித்துவிட்டு நியுயோர்க் நகரில் மருத்துவராக செயற்பட்டார்.

### தீர்மானம்

இவர் ஒரு நாள் நோயாளி ஒருவரை சந்திக்கப் போகின்ற வேளையில் அங்கு மேசையின் மேல் ஒரு துண்டுப்பிரசுரத்தைக் கண்டார். **அதிலே உலகின் மனமாற்றம் அல்லது 600,000,000 மக்களை மதிக்கும் சபைக்குள் திறமையும் கடமையும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.** இப் பகுதியை வாசிக்கும் போது **"உலகெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து நோயாளிகளைக் குணமாக்குங்கள்"** என்ற ஆண்டவரின் கட்டளைக்குப் பிரதியுத்தரமாகத் தான் மிஷனரியாக அழைக்கப்பட்டதை உணர்ந்தார். இத் துண்டுப் பிரதியின் உணர்வு பூர்வமான அறை கூவலால் அசைக்கப்பட்டு மருத்துவ மிஷனரியாகப் போக முடிவெடுத்தார். அக் கால கட்டத்தல் அமெரிக்க மிஷன் சுவிசேஷ ஊழியத்தோடு இணைந்து மருத்துவ ஊழியம் செய்யக் கூடிய ஒருவரைத் தமது இரண்டாவது மிஷனரி அணியோடு இலங்கைக்கு அனுப்புவதற்கு தேடிக்கொண்டிருந்தது. (வின்ஸ்லோ, ஸ்போல்டிங், வூட்வோட்) **அக் கால கடற்பிரயாணத்தினாலும், வெப்ப வலய நோய்களினாலும்**

**அவர்கள் தங்கள் நாட்டுக்கோ, குடும்பங்களிடமோ, திரும்புவோம் என்பதை அவர்கள் எதிர்பார்ப்பதில்லை.** அவர் தன்னுடைய தாயாரைப் பிரிந்து செல்லும் வேளையில், நான் கடைசியாக என் அன்புத் தாயாரைப் பிரிந்து சென்ற வேளையில் என்னை உற்சாகமாக முழு மனதோடு விட்டுக்கொடுத்ததைக் கண்டிருந்தால் நீங்களும் திருப்தியடைந்திருப்பீர்கள் என எழுதினார்.

## திருமணம்

இவர் நியூயோர்க்கில் சூழ்நிலையைப் புரிந்து நடக்கக்கூடிய மகிழ்ச்சி மிக்க நடைமுறையான குணம் கொண்ட ஹரியட் வோட்டர் பரி எனும் ஒரு பெண்ணை 1818 ஆம் ஆண்டில் திருமணம் செய்தார். அவர்களுடைய திருமணப் பந்தம் முழுவதும் ஜோனும் ஹரியட்டும் அன்பின் ஐக்கியத்துடனும் விசுவாசத்துடனும் தங்களை முழுமையாக அர்ப்பணித்த மிஷனரிகளாக வாழ்ந்தனர். அவர் நியூயோர்க்கிலிருந்து கடற்பிரயாணமாக கல்கத்தா சென்று வில்லியம் கேரியைச் சந்தித்தார். **அவர்களது மகள் கல்கத்தாவில் சீதபேதி நோய் வாய்ப்பட்டு மூன்று நாட்களுக்குள் இறந்தார்.** அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பின் அமெரிக்காவிலுள்ள தன்னுடைய நண்பர்களுக்கு எழுதியதாவது: நாங்கள் இந்த அந்நிய தேசத்துக்கு வந்த பிறகு மனம் வருந்துவதாகவும், வராமல் சொந்த நாட்டில் இருந்தால் குறைவாக உபத்திரவப்பட்டிருப்போம் என்றும் சில வேளை எங்களுடைய பெற்றோர் நினைக்கலாம். நாங்கள் வந்ததைக் குறித்து வருந்தவில்லை. தகுதியற்ற கருவியாக இருந்த என்னைப் பிரியமான இரட்சகரிடம் ஆத்துமாக்களைக் கொண்டு வரும் கருவியாக மாற்றியதற்கு கடவுளுக்கே மகிமையுண்டாவதாக என்று எழுதினார்.

ஹரியட் ஸ்கடார் சிறந்த மிஷனரியின் மனைவியென நிரூபித்தார். **அவர்களது மூன்றாவது குழந்தை யாழ்ப்பாணத்தில் மரித்த போதிலும் உற்சாகமாகத் தனது கணவருக்கு உதவி செய்பவராக இருந்தார்.** அவள் இன்னும் பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். அவர்கள் அவர்கள் அனைவருமே மிஷனரி சேவைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அதில் ஒருவர் அமெரிக்காவில் இறையியல் கல்லூரியில் கல்வி கற்கும் போது நீரில் மூழ்கினார். அவர்கள் அனைவரும் தங்களுடைய பெற்றோரின் முன்மாதிரியினாலேயே மிஷனரி வாழ்வைத் தெரிந்து கொண்டனர்.

## வந்து சேர்தல்

பல பிரச்சனைகள் மத்தியிலும் துணிவை இழக்காமல் 1819ஆம் ஆண்டு ஜீன் மாதம் 8ம் திகதி அவர் தன்னுடைய மனைவி ஹரியட்டுடனும், பிள்ளைகளுடனும் (மரியா, ஏமி) தரையிறங்கினார். அவர் மருத்துவ சேவை செய்த போதிலும், சுவிசேஷம் அறிவிப்பதே அவருடைய

பிரதான கரிசனையாக இருந்தது. கிழக்கிற்குப் போகும் போதெல்லாம் குரு நியமனத்திற்காகத் தன்னை ஆயத்தப்படுத்துவதற்காக அவர் இறையியலைக் கற்றார். **1820 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கு அனுமதியைப் பெற்றார். மெதடிஸ்த, பப்டிஸ்ட் மிஷனரிகளாலும், அமெரிக்க சபை சங்கக் குழுவினராலும் நல்லூரிலுள்ள வெஸ்லியன் சிறு ஆலயத்தில் 1821இல் இவர் குரு நியமனம் பெற்றார்.** யாழ்ப்பாணத்திற்கு வந்த பின் தமிழ் மொழியைக் கற்பதில் தீவிரமாக கவனம் செலுத்தினார். அவரது தமிழ்க் கற்றுக்கொள்ளுதலானது அவர் பிரசங்கிப்பதற்கு தேவையானதைவிட மிகவும் திறமையானதாக இருந்தது என்பதை அவருடைய மிஷனரிப் பயணங்களின் போது அவர் கொண்டு சென்ற துண்டுப் பிரசுரங்கள் சுட்டிக்காட்டியது. **அவர் ஆங்கிலத்திற்கு மேலாகத் தமிழ் மொழி கற்றது மாத்திரமல்ல, யாழ்ப்பாண மக்களையும் அவர்களது மொழியைக் குறித்துப் பெருமைப்படவும் ஊக்குவித்தார்.**

## ஊழியப்பணி

ஜோண் ஸ்கடர் 1836 ஆம் ஆண்டு வரை 17 வருடங்களாக இலங்கையில் பணிபுரிந்தார். அவர் தனது மருத்துவப் பணியைப் பண்டத்தரிப்பில் ஒரு சிறிய கட்டிடத்தில் ஆரம்பித்தார். அது பிற்காலத்தில் ஒரு மருத்துவமனையானது. அவர் தனது மருத்துவப் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு தன் பிரத்தியோக மூல வழங்களைப் பாவித்தார். அங்கே தனது மருத்துவப் பயிற்சிகளுடன் சுவிசேஷப் பணியையும் இணைத்து செயற்படுத்தினார். அநேக நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க வாய்ப்புக்களுண்டு, இம் மருத்துவ சிகிச்சை மூலம் அநேக நன்மைகளை நாம் செய்யலாம். மருத்துவத் துறையினூடாக இதனை செய்யாமல் வேறு வழிகளினூடாக செய்ய முடியாது என அவர் தனது வாழ்க்கைச் சுருக்கக் குறிப்புக்களில் எழுதினார். அவர் சுவிசேஷப் பணிக்காக யாழ்ப்பாணம் முழுவதுமாக பயணம் செய்தார். அவர் எழுதிய கைப்பிரதிகள் அவரது பிரசங்கத்துக்கு துணையாக இருந்தன. அவர் சரீர அழுத்தங்களிலிருந்து விடுதலையளிக்கும் மருந்து வகைகளையும், சத்திர சிகிச்சைக்குரிய மருத்துவ உபகரணங்களையும் தன்னுடன் தூக்கிச் சென்றார். இந்த மார்க்கமாகத் தேவன் மனிதனின் ஆன்மீகத்திற்கு வழிகளைத் திறக்கலாம் என அவர் விசுவாசித்தார்.

ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் நான் ஒரு நோயாளியினுடைய தேவைகளைச் சந்திக்க முன் அவர்களுடன் சேர்ந்து ஜெபிப்பேன் உரையாடுவேன் என அவர் எழுதினார். **யாழ்ப்பாணத்தைச் சுற்றியிருக்கும் தீவுகளுக்கு கடற்பிரயாணமாக மிஷனரிப் பயணமாக செல்லும் போது அவருடைய**

நன்றி: இவ் வாழ்க்கை சரிதையானது பேராசிரியர் சோமரத்ன என்பவரால் எழுதப்பட்டதன் தமிழாக்கமாகும்.

தொடரும்...

# ஒருவரி

## முத்துக்கள்

தேவை

இருப்பதை அநுபவியாத

புதுமைத்தேடல்

அதிக வேலைகளின்

சுமை

ஞானமற்ற செயலே

நாளை பார்ப்போம் என்பதை

இன்றே செய்

நன்றாய் வாழ்வாய்

சந்தோஷத்தின் வெற்றி

சமாதானத்தின்

பதிலே

நேர்மையாக இருப்பது

ஓர்

தெரிந்து கொண்ட அர்ப்பணம்

எண்ணையைப் போல்

மிருதுவான வார்த்தை

பொய்யனிடமுண்டு

அடுத்தவருக்கு அறிவுரை

நமக்கு - என்ன

என்பது - கோழைத்தனம்

ஏன் யாருண்டு?

சத்தம் கேட்கிறதா?

இது எழுப்புதலின் சத்தம்

நீ யார் என்பதில்

உன் உண்மை

அடங்கியுள்ளது

சத்தியமே சாத்தானுக்கு

ஓர்

பதிலடி ஆயுதம்

# குறுக்கெழுத்துப் போட்டி – 51 சரியான பதில்கள்

<u>இடமிருந்து வலமாக</u>

01. எப்பாப்பிரா
04. திராணி
09. அகபு

<u>வலமிருந்து இடமாக</u>

03. எக்காளம்
05. உசியா
06. லோகம்மீ
13. திமிர்வாதக்காரன்

<u>மேலிருந்து கீழாக</u>

01. எயோதியாள்
02. எலியா
03. எருசலேம்
08. ஆமான்
10. நகோமி

<u>கீழிருந்து மேலாக</u>

07. மீகாள்
09. அன்னா
11. குலோவேயாளின்
12. காரிருள்

# வினாவிடை – 53 சரியான பதில்கள்

*01. தாவீது – 11 சாமுவேல் 8:15*
*02. சாலொமோன் – பிரசங்கி 7:15*
*03. இயேசு – மத்தேயு 17:2*
*04. யாக்கோபு – ஆதியாகமம் 29:16–22*
*05. இயேசு – லூக்கா 11:35*
*06. இயேசு – மத்தேயு 26:41, மாற்கு 14:38*
*07. யோபு 38:15*
*08. மோசே – சங்கீதம் 90:8*
*09. ஏசா – ஆதியாகமம் 36:6*
*10. நீதிமொழிகள் 21:4*

# அனலின் 2012 ஆன்மீக விருந்து



# இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே!

**லூக்கா 7:37-47** இப்பகுதியில் 47ஆம் வசனத்தின் இறுதிப்பகுதி சொல்கிறது **<u>இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே.</u>** பாவியாகிய அந்த ஸ்திரி இயேசுகிறிஸ்துவின் மேல் மிகவும் அன்பு கூர்ந்தாள். **நாங்கள் அந்த ஸ்திரியைப் போல இயேசு கிறிஸ்துவின் மேல் அன்பு கூருகிறவர்களாக இருக்கிறோமா? அல்லது உலகத்திலும் அழிந்து போகிறதான உலகக் காரியங்களிலும் அன்பு கூருகின்றோமா?**

இயேசுகிறிஸ்து எங்கள் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக எங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் தன்மேலாக ஏற்றுக் கொண்டு அந்தக் கொடூரமான சிலுவையிலே தன்னுடைய கடைசித் துளி இரத்தத்தையும் சிந்தி மரித்தார்.

ஆனால் இன்று நாங்கள் அந்த இயேசு கிறிஸ்துவின் மேல் எவ்வளவாய் அன்பு கூருகின்றோம்? அவர் எங்கள் மேல் வைத்த அன்பிற்குஈடாகஎங்களால்எதுவுமே செய்ய முடியாது. இந்த உலகத்திலே எல்லோரும்தேடும்மிக அவசியமான காரியம் அன்பு. அந்த அன்பு இல்லை என்றால் இந்த உலகமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஒரு நபரை நாங்கள் அடிப்போமாக இருந்தால் அல்லது ஒருவரைப்பற்றி அவதூறாகக்

கதைப்போமாக இருந்தால் எங்களிடத்தில் அன்பு இல்லை என்பதே அர்த்தம். ஆனால் தகப்பன் ஒரு பிள்ளைக்கு அடிப்பதென்பது ஒரு விதிவிலக்கான காரியமாகும். இதைப் பரிசுத்த வேதாகமமும் அங்கீகரிக்கின்றது.

அன்புக்கு உதாரணமாக நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை என்னால் கூற முடியும். 1989ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் தன்னுடைய மனைவியை ஏற்றிச் சென்றார். சிறிது தூரம் சென்ற பின் அவரது மனைவியாரின் சேலை அந்த மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சிக்கிக் கொண்டது. இதனால் மனைவி தூக்கி வீசப்பட்டாள். அவளுடைய மூளை வெளியே வந்து விட்டது. உடனடியாக இணுவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ்.வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கும் வைத்தியர்களால் அவள் கைவிடப்பட்டு இறுதி முயற்சியாக அவளது மூளை உள்ளே வைக்கப்பட்டு சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. இதன் பின்னர் அந்த சகோதரி தன்னுடைய சுயநினைவுகளை இழந்து போனாள். இந்த நிலையிலே தன்னுடைய மனைவியைப் பார்த்த கணவனால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் தன்னுடைய மனைவிக்கு முன்பாக பிள்ளைகளைக் கொண்டு வந்து காண்பித்த போது அவளால் அவர்களை இனம்கண்டு கொள்ள முடியவில்லை. அவளுடைய மூளை செயல் இழந்து விட்டது. இதை அவருடைய நண்பர் எமது போதகரிடம் சொன்ன அந்த வேளையிலே எனது பெரியப்பா யாழ்ப்பாணத்தில் இருந்தார். அவர் அந்த சகோதரிக்காக ஜெபிக்கும்படி கடந்து சென்றார். வைத்தியர் சொன்னார் உங்களுடைய ஜெபத்தினால் எதுவுமே நடக்கப் போவதில்லை. அவளுடைய எந்த நினைவுகளும் திரும்பாது என கூறிவிட்டார்கள். ஆனால் என்னுடைய பெரியப்பா நான் அந்த சகோதரிக்காக ஜெபித்துவிட்டே இந்த இடத்தை விட்டு கடந்து செல்வேன் என கூறிவிட்டார். எனவே வைத்தியர் 5நிமிடங்கள் ஜெபிப்பதற்கு அனுமதித்தார். அவர் ஜெபித்து விட்டுக் கடந்து சென்றார். சொற்ப நேரத்தின் பிற்பாடு அந்தச் சகோதரி எழுந்து வைத்தியரிடம் நான் ஏன் இந்த இடத்திலே இருக்கின்றேன்? எனக்கு என்ன நடந்தது எனக் கேட்டாள். அப்போது அந்த வைத்தியர் நடந்த எல்லாவற்றையும் அவளுக்கு கூறினார். அவள் உடனே கூறினாள். நீங்கள் சொல்கின்ற எதுவுமே எனக்குப் புரியவில்லை. ஆனால் ஆமென் என்கிறதான வார்த்தை மாத்திரமே எனக்குக் கேட்டது. என்ன ஆச்சரியம் சொற்ப நாட்களுக்கு பிற்பாடு அந்தத் தையலை அவிழ்க்க வேண்டும் என வைத்தியர் கூறிவிட்டார். தையல் அவிழ்க்கும் சந்தர்ப்பம் வந்த போது தையல் போட்ட இடத்தை தேடினர் அந்தத் தையலைக் காணவில்லை.

**தேவன் அந்த சகோதரிக்குப் பூரண சுகத்தைக் கொடுத்தார். அதன் பிற்பாடு தன்மீது அன்புகூர ஒருவர் இருக்கிறார் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவள் தேவனுடைய உண்மையான அன்பைக் கண்டு கொண்டாள். அது போல உங்கள் ஒவ்வொருவர் மேலும் கரிசனையுள்ள ஒருவர் இருக்கிறார்.** அவர் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர் உங்களை மறக்கமாட்டார். ஏனென்றால் அவர் உங்கள் மீது அளவிட முடியாத அன்பு வைத்திருக்கிறார். ஆனால் நீங்கள் அந்த இயேசு கிறிஸ்துவின் மீது அன்பு கூருகின்றீர்களா? இவ் விதம் நீங்கள் இயேசுகிறிஸ்துவின் மீது அன்பு கூருவீர்களாக இருந்தால் மற்றவர்களைப் பகைக்க மாட்டீர்கள். மற்றவர்களோடு சண்டை பிடிக்கமாட்டீர்கள், மற்றவர்களைக் குறித்து தேவையற்ற, அவதூறான காரியங்களை கதைக்க மாட்டீர்கள். மாறாக அவர்

களையும் நேசித்து அவர்கள் மீதும் அன்பு கூருவீர்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எங்கள் ஒவ்வொருவர் மீதும் அன்பு வைத்துள்ளார். ஆனால் மனிதர்களாகிய நீங்கள் அவர் மீது அன்பு வைத்திருக்கிறீர்களா?

வேதாகமத்திலே பார்க்கின்ற போது ஒவ்வொரு சபையும் மணவாட்டியாகவே சித்தரிக்கப் படுகின்றது. எனவே மணவாட்டியாகிய எம் ஒவ்வொருவருக்கும் ஒரேயொரு மணவாளன் இருக்கிறார். அவர் தான் கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து. **லூக்கா 7:38 அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு. அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து. தன் தலைமயிரினால் துடைத்து. அவருடய பாதங்களை முத்தம் செய்து. பரிமள தைலத்தை பூசினாள்.** இவ் வசனத்தில் கூறப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குரிய காரணங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**01. அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு. அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து:** அவர் தெய்வீகமுள்ளவராய் இருக்கிறபடியினாலே அவருக்கு உரித்தான பயபக்தியினை, கனத்தினை அவருக்கே செலுத்த வேண்டும்.

**02. தன் தலைமயிரினால் துடைத்து. அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து:** நாம் பாவிகளாக இருப்பதால் தாழ்மையோடு எமது பாவங்களை அறிக்கையிடல் வேண்டும்.

**03. பரிமள தைலத்தைப் பூசினாள்:** அவர் ஆண்டவராக இருப்பதால் முழுவதுமாக எங்களை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். இந்த வேதப் பகுதியிலே கூறப்பட்ட அந்த ஸ்திரி இக் காரியங்களை செய்ததின் நிமித்தமாக தேவன் அவளுக்கு உதவி செய்தார்.

இது போலவே நாமும் அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைத்து அனுதினமும் அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து அவருக்கு பரிமள தைலத்தைப் பூசி எம்மை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். அப்போது அவருடைய பாதத்திலே இருக்கிறவர்களுக்கு அவர் உதவி செய்வார். (லூக்கா 7:38) இவ் வசனத்திலே கூறப்பட்ட இந்த மூன்று வகையான காரியங்களையும் அந்த ஸ்திரி செய்த போது அந்த ஸ்திரிக்கு இயேசுகிறிஸ்து புது நம்பிக்கையைக் கொடுத்து சமாதானத்தோடு அனுப்புகின்றார். **லூக்கா 7:48. 50 அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். அவர் ஸ்திரியை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.** எனவே நாங்கள் ஒவ்வொருவரும் இயேசுவின் பாதத்திலே அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். **அங்கே எங்களுக்கு ஆறுதல் உண்டு. விடுதலை உண்டு, பாவ மன்னிப்பு உண்டு, சமாதானமுண்டு.** அந்த இயேசுவின் பாதத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பார்.

**லூக்கா 8:35 அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும் படி ஜனங்கள் புறப்பட்டு இயேசுவினிடத்தில் வந்து பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத் தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக் கிறதை கண்டு பயந்தார்கள்.** பிசாசினால் மிகவும் வேதனைப் படுத்தப்பட்டு மிகவும் அலைக் கழிக்கப்பட்ட அந்த பிசாசு பிடித்த மனிதனுக்கு இயேசுவின் பாதங் கள் இளைப்பாறுதலைக் கொடுத் தது. உங்களுக்கு இளைப்பாறுதல் வேண்டுமா? அப்படியானால் இயேசுவின் பாதத்தருகே உட்கா ருங்கள்.

**லூக்கா 8:41 அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன் னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந் தபடியால்...** நாங்கள் விசுவாசமுள் ளவர்களாகவும் இருக்க வேண்டும். நாங்கள் ஜெப ஆலயத் தலைவர் களாக இருக்கலாம், துதிக்கிற வர்களாக இருக்கலாம், தேவ வார்த்தையை பிரசங்கிக்கிறவர் களாக இருக்கலாம். ஆனால் நாங்கள் எதை எவ்விதமாகச் செய்தாலும், எங்களுடைய இருத யத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.

**வெளிப்படுத்தல் 1:17 நான் அவரைக்கண்ட போது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந் தேன்: அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என்மேல் வைத்து, என்னை நோக்கி, பயப்படாதே நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள் ளவருமாயிருக்கிறேன்.....** பரிசுத்த வான்களாக வாழ்கிற ஒவ்வொரு வரும் தேவ மகிமையைக் காண் பார்கள். நாம் அவருடைய மகிமை யைக் காண்கிற பொழுது அவரு டைய பாதத்திலே விழுவோம். அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை எம்மேல் வைத்து பயப்படாதே என்று கூறுவார். ஆகவே **பிரியமான தேவபிள்ளை களே எமது வாழ்க்கையிலே பல தரப்பட்ட போராட்டங்களை, பிரச்சி னைகளை நாங்கள் சந்திக்க வேண்டி நேரிடலாம். ஆனால் இவை எல்லா வற்றிற்கும் பதில் இயேசு கிறிஸ்துவின் பாதம் மாத்திரமே.** நாங்கள் தேவனு டைய செம்மையான பாதையிலே நடப்பதற்கு அவருடையபாதத் தைதெரிவுசெய்யவேண்டும் அந்தப பாதம்எங்களுக்கு எல்லா வழியிலே யும் உதவுகிறதாக இருக்கிறது.

**லூக்கா 7:47 ஆதலால் நான் உனக்குச் சொல்லுகின்றேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப் பட்டது: இவள் மிகவும் அன்பு கூர்ந் தாளே. எவனுக்கு கொஞ்சம் மன்னிக் கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூருவான் என்று சொல்லி:** எங்களுடைய வாழ்க்கையிலே அநேகமான பாவங்களும், அக்கிர மங்களும் மன்னிக்கப்பட்டு இன்று அவருடைய பிள்ளைகளாக எம்மை மாற்றியிருக்கிறபடியி னாலே நாங்கள் அவரை அதிக மாக அன்பு கூரவேண்டும். இயேசு கிறிஸ்துவை பாவியாகிய அந்த ஸ்திரி அதிகமாக அன்பு கூர்ந்த தின் நிமித்தமாகப் பராட்டுகின்றார். பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கி ன்ற போது இயேசு கிறிஸ்து அநேகரை பாராட்டியிருக்கின்றார்.

**மத்தேயு 8:10 இயேசு இதைக கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின் செல்லுகிறவர்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய் கிடக்கின்றான். அவன் கொடிய வேதனைப்படுகின்றான். என்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு, நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள்ளே பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல: ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். என்று சொன்னான். **இந்த விசுவாசத்தை இயேசு பாராட்டினார்.** இன்று எங்களுடைய விசுவாசம் எவ்விதமாக இருக்கிறது? **இயேசு எங்களுடைய வாயின் அறிக்கைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டு நான் இப்படிப் பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று சொல்லத்தக்க நிலையிலே எங்களுடைய விசுவாசம் இருக்கிறதா?**

**மாற்கு 12:43 அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்றார். இரண்டு காசு போட்ட ஏழை விதவையை இயேசு பாராட்டினார்.** மற்றெல்லாரைப்பார்க்கிலும் இவள் அதிகமாய்க் கொடுத்தாள். எல்லாப்பாராட்டுக்களையும் விட மிக மேன்மையான பாராட்டு இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே உங்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். கர்த்தர் உங்களைப் பாராட்டும்படி உத்தமமாய் நடக்கிறீர்களா? அவரில் அன்பு கூருகின்றீர்களா? **நமது ஆண்டவர் நம்மிது அன்பு கூர்ந்தபடியால் தனது ஜீவனையே நமக்காகக் கொடுத்தார்.** அந்த அற்புதத்தை நாம் உணர்வதில்லை. உலகத்திலேயே பெரிய அற்புதம் என்னவென்றால் இயேசு கிறிஸ்து எங்களுடைய பாவங்களை மன்னித்து எங்களை இரட்சித்ததாகும். **ஏன் தெரியுமா? அதற்காக இயேசு கிறிஸ்து தன்னுடைய ஜீவனையே கொடுக்க வேண்டியிருந்தது.**

உலகத்திலே நாம்பெறும பட்டம், பெயர், புகழ் எல்லாவற்றைப் பார்க்கிலும் எனக்காகவும், உனக்காகவும்ஜீவனைக்கொடுத்த மணவாளனாகிய இயேசு கிறிஸ்து உன்னையும், என்னையும்பார்த்துச சொல்ல வேண்டும், என் மணவாட்டி மிகவும் அன்பு கூர்ந்தாளேயென. **பலிகள், காணிக்கைகள், ஊழியங்கள், தேவனைத் துதிப்பது, தேவ ஆராதனைகளுக்கு வருவது எல்லாம் பிரதானமானதுதான் ஆனால் நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடும் அவரிலே அன்பு கூருவீர்களாக இருந்தால் மற்ற எல்லாக் காரியங்களையும் நீங்களாகவே முன்வந்து செய்வீர்கள்.** அவைகள் தானாகவே நடக்கும். அந்த ஸ்திரி வாய் திறந்து எந்த வார்த்தைகளையும்

பேசவில்லை. ஆனால் அவளுடைய உண்மை, அவர் மீது அன்பு கொண்ட அந்தத் தன்மை, அவளுடைய வெளிப்பிரகாரமான செயற்பாடு எல்லாவற்றையும் அவர் அறிந்திருந்தபடியினாலேயே அவர் சொன்னார். இவள் மிகவும் அன்பு கூர்ந்தாள்.

இன்றைக்கு எங்களுடைய செயற்பாடுகளைப் பார்த்து இயேசு இவ்விதம் கூறமுடியுமா? **இயேசுவில் அன்பு கூர்ந்தால் எல்லோரையும் நேசிப்போம். தேவ சபையை நேசிப்போம், தேவன் தந்த ஊழியர்களை நேசிப்போம், தேவ வார்த்தையை நேசிப்போம், தேவ வார்த்தைகள் வருகின்ற போது அது அப்படியல்ல, இப்படி, இப்படியல்ல, அப்படிச் செய்யலாம் என்று சொல்லி வாக்குவாதம் பண்ணமாட்டோம்.** தேவனுக்கு பிரியமற்ற காரியங்களில் அதிக வாஞ்சையுள்ளவர்களாய் இருப்போமென்றால் தேவனைத் துதிக்க, ஜெபிக்க, தேவ வார்த்தைகளைக் கேட்க விருப்பமற்று இருப்போமென்றால், தேவ அன்பு எங்களிடத்தில் இல்லை. எங்களுடைய வாழ்க்கையின் அடிப்படை நோக்கமாக தேவன் மீது அன்பு கூருதலே இருக்க வேண்டும். **தேவன் மீது அன்பு கூருகின்றேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்.** ஆண்டவர் மீது எங்களுடைய அன்பு இருக்குமாக இருந்தால் அவருக்காக எதையும் செய்யத் தயங்கமாட்டோம்.

ருமேனியா தேசத்திலே இராணுவ மிரட்டல்கள் இருந்த அந்தக் காலப்பகுதியிலே மறைவாக ஆராதனை செய்து வந்த கிறிஸ்தவர்களைப் பிடித்து கிறிஸ்துவை மறுதலிக்கச் சொல்லி, வேதாகமத்தின் மீது துப்பச் சொன்னார்கள். அப்பொழுது எல்லாக் கிறிஸ்தவர்களும் வந்து வேதாகமத்தின் மீது துப்பிவிட்டுக் கடந்து சென்றார்கள். ஆனால் ஒரு வயது முதிர்ந்த பெண்மணி அந்த இடத்துக்கு வந்த போது அவள் முழந்தாழில் நின்று அந்தப் பரிசுத்த வேதாகமத்தை எடுத்து அதிலிருந்த மற்றவர்கள் துப்பிய எச்சில்கள் எல்லாவற்றையும் துடைத்து அந்த வேதாகமத்தை முத்தமிட்டாள். அதன் விளைவாக அவள் அந்த இடத்திலே இரத்த சாட்சியாக மரிக்க வேண்டி நேரிட்டது.

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாராட்டத்தக்கதாய் பாவியாகிய அந்தப் பெண் செய்த மூன்று காரியங்கள்,**

## 01. கண்ணீர்விட்டாள்.

மனதுருக்கமுள்ள இயேசுவின் பாதத்தில் அவள் கண்ணீர்விட்டபடியால் அவர் அவளைப்பார்த்து மனதுருகி இவள் மிகவும் அன்பு கூர்ந்தாள் எனப்பாராட்டுகின்றார். **தேவ பிள்ளையே உன்னுடைய கண்ணீர் தேவனுடைய அன்பின் நிமித்தம் வெளிவரட்டும். ஒரு வேளை நீங்கள் பாவம் செய்திருந்தால் அந்தக் கண்ணீரினூடாக உங்களுடைய மனஸ்தாபம் வெளி வரட்டும்.** அப்போது அவர் உங்களைப் பார்த்து மனதுருகி இவள் மிகவும் அன்பு கூர்ந்தாள், இவன் மிகவும் அன்பு கூர்ந்தான் எனக்கூறுவார்.

## 02. முத்தமிட்டாள்.

முத்தம் ஆழமான அன்பின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் செயற்பாடு. ஆனால் யூதாஸ்

வஞ்சக முத்தமிட்டான். 30வெள்ளிக்காசுக்காக முத்தமிட்டான். இது போலியான முத்தமாகும். **இந்தப் பாரினிலே அவருடைய பாதம் ஒன்றே எங்களுக்குப் போதும். மற்ற எதுவுமே வேண்டாம் என்கிறதான அந்த ஆழமான அன்பின் ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறதான முத்தத்தையே தேவன் எங்களிடம் எதிர்பார்க்கின்றார்.**

## 03. பரிமள தைலம் பூசினாள்.

அபிஷேக நாதருக்கு விலையேறப் பெற்ற பரிமள தைலத்தைப் பூசுகிறாள். **உன்னதப்பாட்டு 1:3பகுதி உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது. லூக்கா 7:37பகுதி ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து.....** அவளுக்கு தெரியும் நான் அதிகமாய் நேசிக்கிறவரைப் பார்க்கப் போகின்றேன் எனவே தன்னிடமிருந்ததில் விலையேறப்பெற்றதைக் கொண்டு வந்தாள்.

**தேவ பிள்ளைகளே உங்களுடைய மணவாளனைப் பார்க்கும் படியாக வந்திருக்கிற நீங்கள் அவருக்காக எதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? எம்மில் எத்தனை பேர் வெறுங்கையோடு அவரைப்பார்க்க வந்திருக்கின்றோம். அவள் தான் கொண்டு வந்த அந்தப் பரிமளதைலத்தை உடைத்துப் பூசுகின்ற போது அந்தப் பரிமள தைலம் அவளுடைய உடலிலும் பட்டிருக்கும். அப்பொழுது அவள் அந்த வீட்டைவிட்டுக் கடந்து செல்லுகிற போது வாசனை வீசுகிறவளாகவே வெளியே சென்றிருப்பாள்.**

**அதே போன்று தேவனை ஆராதிக்க வந்த எங்கள் மேலும் ஊற்றுண்ட பரிமள தைலம் பட்டிருக்கின்றது. இயேசுவின் வாசனையை சுமந்து செல்ல வேண்டும். இந்த வாசனை எங்களில் வீசுகிற போது மற்றவர்கள் எங்களைப் பார்த்து இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே என்று சொல்லத்தக்கதாய் நாங்கள் வாழவேண்டும்.**

**முற்றும்.**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் ஜோஹணன் டி.பிலிப்**

# வினா விடை - 52

## சரியான விடை எழுதியவர்கள்

01. எஸ்.யோகேஸ்வரி - மீசாலை
02. எஸ்.சனோஜா - மீசாலை
03. சு.ஜான்சி - நாவற்குழி
04. செ.எமிமாள் - பாண்டவெட்டை
05. செ.நகுலா - பாண்டவெட்டை

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :-.............................................


விலாசம் :-.............................................

.............................................

.............................................

.............................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.




To:

TO:

MRS. Y.POOMANY,
ZION CHURCH,
JAFFNA.

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.